2013 அக்டோபர் 25]

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் செவ்வாழை, நேந்திரன், மட்டி போன்ற அரிய வகை வாழைகள் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்த வகைகள் தமிழகத்தின் பிற மாவட்டங்களில் அதிகமாக உற்பத்தி செய்யப்படுவதில்லை. இந்த வாழையில், குறிப்பாக சில வகை நோய்கள் தென்படுகின்றன. இதனுடைய samples–ஐ நாங்கள் ஆய்வு செய்வதற்காக திருச்சிக்குத்தான் எடுத்துச் செல்லவேண்டி இருக்கிறது. எங்கள் மாவட்டத்திலேயே வாழை ஆராய்ச்சி மையம் உருவாக்கப்பட்டால், அந்த வாழை விவசாயிகளுக்கு அருகிலேயே ஒரு தீர்வு கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. தோட்டக்கலை மையத்தில் இதற்குண்டான வசதிகள் இல்லை. ஆகையால், இதற்கென்று தனியாக ஒரு வாழை ஆராய்ச்சி மையத்தை கன்னியாகுமரி மாவட்டத்தில் உருவாக்குவதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்று அரசை தங்கள்வாயிலாக கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தமிழ்நாட்டில் ஆராய்ச்சி மையங்கள் அதிகளவில் இருப்பதால், அந்த ஆராய்ச்சி மையங்களை கன்னியாகுமரி மாவட்ட விவசாயிகளும் பயன்படுத்திக்கொள்ளலாம். எனினும், அதற்கான அவசியம், தேவை இருப்பின், பிற்காலத்தில் அதுபற்றிப் பரிசீலக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

19—

சொந்தக் கட்டடம்

***4577—திருமதி ஆர். சாந்தி:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேந்தமங்கலம் தொகுதி, நாமகிரிப்பேட்டை ஒன்றியம், ஓ. பச்சுடையாம்பாளையம் ஒடுவன்குறிச்சி–1 மற்றும் 2 நியாய விலைக் கடைகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் தொகுதி, நாமகிரிப்பேட்டை ஒன்றியம், ஓ.பச்சுடையாம் பாளையம் ஒடுவன்குறிச்சி 1 மற்றும் ஒடுவன்குறிச்சி 2 ஆகிய நியாய விலைக் கடைகளை நடத்தும் ஓ.ஜேடர்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டத் தேவையான அடிமனை மற்றும் நிதி வசதி ஏதும் இல்லாததால் இந்நியாய விலைக் கடைகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட தற்போது வழிவகை இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி அவர்கள்.*

திருமதி ஆர். சாந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உதகமண்டலத்தில் உள்ள பழங்குடி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையிலும் அவர்களது பண்பாட்டினைப் பாதுகாக்கும் வகையிலும் பழங்குடி மக்களின் கலாச்சாரத்தினை உலகமறியச் செய்யும் வகையிலும் அரசாங்கம் சார்ந்த அமைப்பு அவசியம் என்பதைக் கருத்தில்*

2013 அக்டோபர் 25]

கொண்டு, பழங்குடி மக்கள்மீது தனிக் கவனம் செலுத்தி நீலகிரி மாவட்டத்தில் பழங்குடியினர் பண்பாட்டு ஆதார மையம் ஒன்றினை அமைக்க ரூபாய் 10 கோடியே 12 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளார்கள், மேலும், எனது தொகுதியான சேந்தமங்கலத்தில் ஒரு பேருந்து நிலையமும், எருமப்பட்டியில் ஒரு பேருந்து நிலையமும் மற்றும் தொகுதி மக்களின் சாலை மேம்பாட்டு வசதிக்காக ரூபாய் 20 கோடியையும் ஒதுக்கிக் கொடுத்த புரட்சித் தலைவி தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) என்றும் பழங்குடி மக்களின் நெஞ்சில் வாழும் அன்புப் பூஞ்சோலை தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) நன்றி கூறிக்கொள்கிறேன். எனது சேந்தமங்கலம் தொகுதி, நாமகிரிப்பேட்டை ஒன்றியம், ஓ.பச்சுடையாம் பாளையம் ஒடுவன்குறிச்சியிலுள்ள 1–வது நியாய விலைக் கடை 570 கார்டுகளும், 2–வது நியாய விலைக் கடை 630 கார்டுகளும் கொண்டு சுமார் 18 வருடங்களாக வாடகைக் கட்டடத்திலே இயங்கி வருகின்றன. இந்தத் தொகுதி பழங்குடியினர் வசிக்கக்கூடிய மிகவும் பின்தங்கிய தொகுதி. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆதரவோடு இந்தத் தொகுதியின்மேல் தனிக் கவனம் செலுத்தி இந்த ஒடுவன்குறிச்சி கிராமத்திலுள்ள 1 மற்றும் 2 ஆகிய நியாய விலைக் கடைகளுக்கு அரசாங்கத்தின்மூலமாக சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுத்தால் அந்த மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே கூறிக் கொண்டு, தொகுதி மக்களின் சார்பாக நன்றி கூறி, அமைகின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழும் மனித இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் தமிழ்நாட்டில் கடந்த இரண்டு ஆண்டுகளில் 648 நியாய விலைக் கடைகளுக்குப் புதிய கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, நாமக்கல் மாவட்டத்தில் 27 புதிய நியாய விலைக் கடைகளுக்குப் புதிய கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அன்புக்குரிய மாண்புமிகு*

உறுப்பினர் சகோதரியினுடைய தொகுதியில் மேற்கண்ட கடைகளுக்கான இட வசதியைக் கொடுக்க நம்முடைய நாமகிரிப்பேட்டை ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவருக்கு மாவட்ட இணைப் பதிவாளர்மூலம் 15–10–2012–லேயே முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளன. அது விரைவாக பரிசீலிக்கப்பட்டு, இடம் கிடைக்கும்பட்சத்தில் மாவட்ட பொது நிதியிலிருந்தோ, ஊராட்சி நிதியிலிருந்தோ அல்லது ஊராட்சி முகமை நிதியிலிருந்தோ விரைவில் கட்டிக் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி அவர்கள்.*

திருமதி ஆர். சாந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குக் கட்டடம் கட்டித் தருவதற்கு அனுமதி வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது கோடானு கோடி நன்றியினைத் தொகுதி மக்களின் சார்பாகச் சமர்ப்பிக்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.*

முற்பகல் 10–35

திரு. ம. முத்துராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களுடைய எண்ணங்களை ஈடுசெய்யக்கூடிய வகையில், தமிழகத்தில் ஆட்சிசெய்து கொண்டிருக்கும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில், திருமங்கலம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சின்னவாகைக்குளம், பெரியவாகைக்குளம், சுங்கராம்பட்டி, கல்லுப்பட்டி ஒன்றிய சுக்களாபுரம், ஊராண்டவரப்பனூர் போன்ற கிராமங்களில் நியாய விலைக் கடைகள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இவற்றுக்கு இடங்களெல்லாம் தேர்வு செய்யப்பட்டிருக்கிற சூழ்நிலையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த இடங்களிலெல்லாம் சொந்தக் கட்டடங்கள் கட்டித்தர முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.*

2013 அக்டோபர் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் மற்ற உறுப்பினர்களுக்கும் தெரிவித்துக்கொள்வதென்னவென்றால், அந்த நியாய விலைக் கடைகளை நடத்துகின்ற சங்கத்தில் நிதி இருக்கும்பட்சத்தில், அதன்மூலமாக சொந்தக் கட்டடம் கட்டுவதில் எந்தவித ஆட்சேபணையும் இல்லை. நிதியில்லாதபட்சத்தில், மாவட்டப் பொது நிதியிலிருந்தோ அல்லது ஊராட்சி நிதியிலிருந்தோ, ஊராட்சி முகமை நிதியிலிருந்தோ, இடம் இருக்கும் என்று சொல்கின்றபோது, நமது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருடைய நிதியிலிருந்தோ கட்டிக்கொள்வதற்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை. அதுபோன்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொந்த நிதியை கொடுக்கும்பட்சத்தில், விரைவில் கட்டிக்கொடுக்கப்படும், அல்லது விரைவாகக் கட்டிக்கொடுப்பதற்கான வழிவகை செய்ய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு விரைவாக நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 20, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

20—

குழந்தைகள் காப்பகம்

***34239—திருமதி எஸ். விஜயதரணி:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் மூலமாக குழந்தைகள் காப்பகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?